CHIEF EDITOR
Dr. P. MURUGAN

SPECIAL ISSUE EDITORS
Dr. C. Sadhanandan
Dr. K. Girivasan
Dr. D. Sivalingam
Mr. A. Sadasivam

SPECIAL ISSUE EDITORIAL BOARD
Dr. K. Sudhakar
Dr. A. Ramesh
Dr. C. Chellapillai
Dr. D. Gajalakshmi
Dr. K. R. Latha
Dr. J. Sivakumar
Dr. M. Elumalai
Dr. V. Ramraj
Dr. M. Prabhu
Mr. M. Senthilkumar
Dr. K. Vadivel Murugan

# துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)

ஆற்றல்வளத் தனித்தகுதி பெற்றது
மொழிவாரிச் சிறுபான்மை நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்றது
அரும்பாக்கம், சென்னை - 600 106.

**DWARAKA DOSS GOVERDHAN DOSS VAISHNAV COLLEGE**
**(Autonomous)**
College with Potential for Excellence, Linguistic Minority Institution
Affiliated to University of Madras, Arumbakkam, Chennai - 600 106.

## தமிழ்த்துறை & தமிழ் இலக்கியத்துறை

நடத்தும்

## பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு

**DEPARTMENT OF TAMIL & TAMIL LITERATURE**
Organizing
**International Modern Tamil Literature Conference**

**நாள் : 21.04.2022**

Pranav Journals

பிரணவ் தமிழியல் ஆய்விதழ் (சிறப்பிதழ்)
PRANAV JOURNAL OF TAMIL (SPECIAL ISSUE)
ONLINE QUARTERLY JOURNAL
PEER REVIEWED JOURNAL
ISSN : 2582-9599
SPECIAL ISSUE : VOLUME 1 - ISSUE 1B - PART 2

70. நவீனக் கவிதைகளின் ‘பெண்மொழி’ கருத்தியல் (குட்டிரேவதி கவிதைகளை முன்வைத்து) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .497

மைத்திரி அன்பு

71. பெருமாள் முருகனின் பூக்குழி நாவலில் சாதிய முரண் . . . . . . . . . 504

ச. ரம்யா

72. நவீன இலக்கியத்தில் உயிரினங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . .510

திருமதி. ரம்யா

73. பாரதி கவிதைகளில் இயற்கை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .521

முனைவர் த. ராஜீவ்காந்தி

74. இன்னொரு தடவை சிறுகதைத் தொகுப்பில் அந்நியமாதல் கோட்பாடு .525

ரீனா தேவராஜ்

75. கற்றல் எனும் அறம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 535

முனைவர் க. லதா

[illegible]லில் கல்விச் சிந்தனை . . 540

முனைவர் க. ர. லதா

77. கவிதைகளில் காணலாகும் முரண் சிந்தனைகள் . . . . . . . . . . . . 546

முனைவர் வே. லீலாவதி

78. பாவேந்தர் பாரதிதாசனும் திராவிட இயக்கமும் . . . . . . . . . . . . . 553

முனைவர் து. வசந்தி

79. கவிஞர் மீராவின் கவிதைகளில் இலக்கியத் திறன் . . . . . . . . . . . . . 558

முனைவர் கு. வடிவேல் முருகன்

80. அஞ்சலை புதினத்தில் பெண் நிலைச்சித்திரிப்பு . . . . . . . . . . . . . . .565

முனைவர் ப. வித்தியாவதி

81. ‘காகித உறவு’ சிறுகதையில் பெண் சித்தரிப்புகள் . . . . . . . . . . . . . .569

முனைவர் திருமதி வே. விஜி

82. பாமாவின் சிறுகதையில் பெண்ணியச் சிந்தனைகள் . . . . . . . . . . . . 575

முனைவர் பெ. ஜெகதாம்பாள்

# கற்றல் எனும் அறம்

**முனைவர் க. லதா**
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை – 18.

75

## முன்னுரை

காலந்தோறும் தோன்றும் இலக்கியங்கள் அவ்வக் காலத்திற்குத் தேவையான அறங்களை முன்னிறுத்திச் சமூகத்தை நெறிப்படுத்துகின்றன. கால மாற்றத்திற்கு உட்பட்டு இலக்கிய வடிவங்கள் மாற்றம் பெறுகின்றன. ஆனால் அவை வலியுறுத்தும் அறங்கள் ஒன்றே. அவ்வகையில் இப்பூவுலகில் மனிதன் என்று சிந்திக்கத் தொடங்கினானோ அன்றே கல்விக்கான வித்து மனித மூளையில், மனத்தில் தானாக விழுந்தது. புற உலகிலிருந்தும், பிற உயிரிகளிடமிருந்தும் மனிதர்கள் கற்றுக்கொள்ளத் தொடங்கியபோது, பூமியை நெகிழ்த்தித் தலைதூக்கும் குறுந்தாவரம் போல, கல்வி மனித மனத்திலும் சிந்தையிலும் முகிழ்த்திருக்க வேண்டும். மனிதனுடைய சிந்தையும் மனமும் ஆழ அகலப்பட வேண்டுமெனில் அதற்குக் கல்வியே முதலும் முடிவுமான தீர்வு. இதனை எண்ணியே, 'உற்றுழி உதவியும், 'பிச்சை புகினும் கற்கை நன்றே', 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' எனக் கற்றறிந்த சான்றோர் கவிதைகள் படைத்தனர். 'எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே;' என்று மனத்திண்மையை வளர்க்கும் விதமாகச் செய்யுள்கள் எழுந்தன. மனித குலத்தின் வளமான, வாய்மையான வாழ்வுக்குக் கல்வி ஒன்றே சிறந்த களம் என்பதை வலியுறுத்தும் விதமாகத் தற்காலத் தமிழிலக்கிய வகைகளும் படைக்கப்படுகின்றன. அவ்வகையில் விளம்பரத் துறையில் விளம்பர முகவராகப் பணிபுரியும் திரு. மு. அபுல் கலாம் ஆசாத் அவர்களின் 'குப்புசாமியின் அவியலும் குலாமின் குதிரையும்' எனும் குறும்புதினம் அறிவுறுத்தும் கல்வி குறித்த சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது இவ் ஆய்வுக் கட்டுரை.

கல்விச்சிந்தனையை வாசகரிடையே விதைப்பதோடன்றி, இக் குறும்புதினம் சமயநல்லிணக்கத்தையும், நட்பின் மேன்மையையும் பழம் பெருமை கொண்ட மதுரையின் தோற்றத்தையும் சித்திரிக்கிறது. உணவுக்கடை நடத்துபவராகக் குப்புசாமியும், மாப்பிள்ளை ஊர்வலத்திற்குக் குதிரையை வாடகைக்கு